# பேரறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள்: கழகத்தினர் மரியாதை!



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கழகத்தினருடன் ஊர்வலமாகச் சென்று பேரறிஞர் பெருந்தகையின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வுகளில் தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே கலைமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன். கணேசன், எஸ்.எம்.சீனியார், கே.எஸ்.ரவி, எல்.குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், கே.சி. சிவக்குமார், மகேஸ்வரி சண்முகநாதன், பாத்திமா பீவி, கருணாகரன், சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சேலம் நகர பேருந்து நிலையம் அருகேயுள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு 116 வது பிறந்த தினத்தையொட்டி மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்த்திகேயன் ஜி.குமரவேல், திருநாவுக்கரசு, மஞ்சுளா சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக் கண்ணன், மேயர் ஆ.ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பூபதி, சந்திரன்மா, நகர நிர்வாகிகள் பா.ரகுபதி, கே.ஆர்.முருகன், வி.கணேசன், கோமதி, தினகரன், எம்.எம்.ஷெரீப், சாந்தமூர்த்தி, பன்னீர்செல்வம், எம்.அசோகன், தனசேகரன், ஜெய், ஏ.எஸ். சரவணன், ஆர்.பி.முருகன், கேபிள்.ராஜா, மனமேடு மோகன், சி.பிரகாஷ், தமிழரசன், ஜெயக்குமார், இப்ராகீம், அருண் பிரசன்னா, கேபிள் சரவணன், வசந்தா மயில் வேல், பூங்கொடி, ராஜேஸ்வரி, பாலாமணி, தேவி பாலன், ரெயின்போ, நடராஜன், எம்.குப்புசாமி பா.கோமான், ஆறுமுகம் ஜி.வெங்கடேசன் உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் என்.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பகுதி, வார்டு செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இருந்து பேரணியாகப் புறப்பட்டு நாகை பாரதி மார்க்கெட் அருகே உள்ள அண்ணா சிலைக்கும் நாகை புத்தூரில் உள்ள அண்ணா சிலைக்கு நாகை மாவட்ட கழக செயலாளர்என் கௌதமன் தலைமையில்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன். நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சிக்கல், என்.ஆனந்த் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில் பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், வீரமணி உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அப்பம்பட்டில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநில கழக நிர்வாகி சி.இறைவன், மாநகரக் கழக செயலாளர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



திருச்சியில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என் நேரு வழி காட்டுதலின்படி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, சேர்மன் துரைராஜ், லால்குடி நகரச் செயலாளர் துரை, கழக நிர்வாகிகள் மோகன்தாஸ், இளங்கோ, கனகராஜ், கண்ணன், கலைச்செல்வி, வாமடம் சுரேஷ், பந்தல் ராமு, முத்து, பழனி, முரளி, தாஹிர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகரம் கிட்டப்பா அங்காடி அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா சிலைக்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம். எல்.ஏ.,தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (ஏ) என். செல்வராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், மாவட்ட சார்பு அணி எம்.கே.மருது, செல்வராஜ், ஸ்ரீதர், சௌமியன் நகர நிர்வாகிகள், மலைக்கோயில் பிரபாகரன், வை.தெய்வநாயகம், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி,தா.பழூர்கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, தா.பழூரில் அமைந்துள்ள அவரது முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து, கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், ஒன்றிய கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சொ.க.கண்ணன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.சூசைராஜ், ஒன்றிய பொருளாளர் த.நாகராஜன், மாவட்டப் பிரதிநிதிகள் கோவி.சீனிவாசன், சி.கண்ணதாசன், மாவட்ட அணி நிர்வாகிகள் குணசீலன், எழிலரசி அர்ச்சுனன், தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.